கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 10.00

## குறளமுதம்–89

வள்ளுவர் வல்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்–௯ அறத்துப்பால் விருந்து ஓம்பல்**

**உடைமையுள் இன்மை விருந்துஓம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு**

செல்வக்காலத்து வறுமை என்பது விருந்தோம்பலை புறக்கணிக்கும் அறியாமையாகும். அஃது அறிவிலிகளிடம் உள்ளதாகும்.

மலர்–08 ஜனவரி – 2016 இதழ்–89

### தொழிலின்போது உயிரிழந்த பனை தென்னை வள கூ.சங்கங்களின்

# உறுப்பினர்களின் குடும்பத்துக்கு தலா ரூபா 1 இலட்சம் இழப்பீடு!

### கூட்டுறவு அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதியை வழங்கினார் முதலமைச்சர்!

**பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களில் தொழில்புரியும்போது மரத்தால் தவறி வீழ்ந்து உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு நிதியாக தலா ரூபா 1 இலட்சம் வீதம் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.**



கடந்த டிசெம்பர் 30ம் திகதி வடக்கு மாகாண சபையின் பொதுநோக்கு மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் அவர்கள் தலைமையில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் திரு சி.வி.விக்னேஸ்வரன் அவர்களால் இந்நிதி உரியவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

இதில் வடமாகாண சபையின் அவைத் தலைவர், வடக்கு கூட்டுறவு அமைச்சர், மீன்பிடி, கிராமிய, வர்த்தக மற்றும் போக்குவரத்து அமைச்சர், மற்றும் வடமாகாண சபையின் உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர், பணியாளர்கள் மற்றும் நிதி உதவிபெறும் பயனாளிகள் மற்றும் அச்சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள், தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(7ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி, மானிப்பாய் சங்கங்களால் பனம்விதைகள் நடுகை செய்யப்பட்டன!

### சாவகச்சேரி சங்கம்

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் மரநடுகை மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கச்சாய் வீதியின் இரு மருங்கிலும் பனம் விதைகளை நாட்டும் நிகழ்வினை அண்மையில் மேற்கொண்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர், கூட்டுறவு ஆணையாளர், யாழ். மாவட்ட கூட்டுறவு அலுவலர், சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரியின் முன்னாள் அதிபர், ட்றிபேக் கல்லூரி மாணவர்கள் சாவகச்சேரி சங்கத் தலைவர், பொது முகாமையாளர், பணியாளர்கள், பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள், (7ம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம் சங்கம் சீருடைகள் வழங்கியது

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான சீருடைகள், ஆடைகள் என்பன வழங்கும் நிகழ்வை அண்மையில் சங்கத் தலைவர் தலைமையில் நடத்தியது. (7ம் பக்கம் பார்க்க)

## சமாசத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பணியாளர் நலன்புரிச் சங்கத்தின் 2015ம் ஆண்டுக்கான வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இம்மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. (7ம் பக்கம் பார்க்க)

**கற்பகம் வாசகர்கள், கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் கற்பகத்தின் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

**சிந்தனைத்துளி**

“உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன”

# கற்பகக்கரு

## வரிச்சுமை

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் 2016ம் ஆண்டு மேலும் புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இதில் மிகவும் முக்கியமான விடயம் கிளை நிலையங்களுக்கான விற்பனை அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு கூடுதலான வரி செலுத்தவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதுடன், மேலதிக கள்ளினை போத்தலில் அடைக்கும் செயற்பாட்டினை மேற்கொண்டுள்ள சங்கங்களுக்கான அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கு இதுவரை ரூபா 2 இலட்சம் செலுத்தப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அது ரூபா 10 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

சங்கங்களின் அங்கத்தவர்களினால் பருவகாலங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற கள்ளில் சங்கங்கள் தமது விற்பனைக்கு மேலதிகமாக உள்ள கள்ளினை வடிசாலைக்கு அனுப்பி, அதனை சாராய உற்பத்திக்கு பயன்படுத்துவதன்மூலம் மேலதிகமான கள்ளினை நிலத்தில் ஊற்றுவது தடுக்கப்பட்டு அங்கத்தவர்களுக்கு ஏற்படக்கூடிய நட்டமும் தவிர்க்கப்பட்டு வருகிறது.

ஆனால் இதற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் இவ்வாண்டு வடிசாலைகளை இயக்குவதற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான வரிக்கட்டணமும் பல மடங்கால் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் வடிசாலைகள் செயற்படமுடியாத ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளமை வருந்தத்தக்கதே.

இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் கூட்டுறவின்மூலம் அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார, கல்வி, பண்பாட்டு விழுமியங்கள், சுகாதார நலத்திட்டங்கள் என்பவற்றை மேம்படுத்தலும் வளர்த்தலுமே ஆகும்.

2016ம் ஆண்டுக்கான வருடாந்த வரவு–செலவுத் திடடத்தை ஒவ்வொரு சங்கங்களும் தயாரித்து செயற்படுத்த இருக்கின்ற இவ்வேளையில், மேற்கூறப்பட்ட வரிச்சுமைகளை தாங்கிக் கொள்வது மிகவும் கடினமானதே. இருப்பினும் இச்சங்கங்களை வழிநடத்துகின்றவர்கள் மேற்கூறப்பட்ட விடயத்தை தமது மேலான கவனத்தில் கொண்டு, இச்சங்கங்கள் ஓர் கூட்டுறவு அமைப்பு என்பதையும் இவை 1972ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மிகவும் சிறப்பாக சிறந்த நலத்திட்டங்களை குறிப்பாக அங்கத்தவர் ஓய்வூதியத்திட்டம், விபத்து நலத்திட்டம், காப்புறுதித் திட்டம், கல்வி அபிவிருத்தித் திட்டம், சமூக மேம்பாட்டு நலத்திட்டங்களை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் என்பதையும் உரிய வரிகளை முறையாக செலுத்திவருதுடன், கள் உற்பத்தி மட்டுமன்றி உபஉணவு உற்பத்தியிலும் முழுமையாக கவனம் செலுத்துகின்ற நிறுவனங்கள் என்பதையும் சுட்டிக்காட்டி, அரசு வரிவிலக்களிப்பு வழங்க வேண்டும் என்பதை ஆணித்தரமாக புள்ளி விபரங்களுடன் முன்வைத்தால் வரி விலக்கை பெறமுடியும் என கற்பகம் திடமாக நம்புகிறது.

“அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்”

ஆசிரியர்

# வளர்ச்சிப் படிகளாக பண்பாட்டு அம்சங்கள்

தமிழரின் முன்னேற்றத்துக்கு திராவிட பண்பாடும், ஆரியரின் முன்னேற்றத்துக்கு ஆரியப் பண்பாடும் கீழைத்தேசத்தவரின் முன்னேற்றத்துக்கு கீழைத்தேச பண்பாடும், ஐரோப்பியரின் முன்னேற்றத்துக்கு ஐரோப்பிய பண்பாடும், முஸ்லிம் மக்களின் முன்னேற்றத்துக்கு இஸ்லாமிய பண்பாடும் அத்திவாரமாக அமைந்துள்ளன.

பண்பாடு என்பது மனிதனால் உருவாக்கப்பட்டதாகும். மனிதனின் மூதாதையினர் தலைமுறை தலைமுறையாக தோற்றுவித்த விழுமியங்கள், நெறிகள், ஒழுக்கங்கள், பட்டறிவுகள், கலைகள், இலக்கியங்கள், சமய வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட அம்சங்களின் தொகுப்பே பண்பாடாகும். இவை மக்களுக்கு சிறந்த வழிகாட்டியாக எல்லாக்காலங்களிலும் இருந்துவந்துள்ளன.

மக்கள் அனைவரும் பிறருடன் இணைந்து வாழும் போதும் செயற்படும்போதும் ஏற்பட்ட சிறந்த மனித நடத்தைகளினதும் சிறந்த மனித தொடர்புகளினதும் தொகுப்பாகவே பண்பாட்டு அம்சங்கள் விளங்குகின்றன. இவற்றின் மூலம் மனிதன் சிக்கல்கள் நிறைந்துள்ள மனித நடத்தைகளையும் மனித தொடர்புகளையும் நவீனமயப்படுத்திக்கொள்ளவும் இலகுபடுத்திக்கொள்ளவும் முடிகின்றது.

சமூக மக்கள் அனைவரையும் ஒழுக்கம் நிறைந்த நற்பிரசைகளாகவும் மனிதனப் பண்புகள், மனித நேயம் உள்ளவர்களாகவும் சமூகத்தில் உருவாக்குவதற்கு பண்பாட்டு அம்சங்கள் துணையாக அமைந்துள்ளன.

பண்பாட்டு அம்சங்கள் தோன்றாத காலத்தில் மனிதன் நாகரீகமற்றவனாகவும் அறிவற்றவனாகவும் வாழ்ந்தான். பண்பாட்டு அம்சங்களே மனிதனை முழுமையாக நாகரீகப்படுத்தி நவீன உலகுக்கு அழைத்துச் சென்றுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. பண்பாட்டு அம்சங்கள் மனிதனை முழுமைத்துவமான மனிதனாக உருவாக்குவதற்கு எவ்வளவு உதவியுள்ளதோ அதேபோல கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களும் கூட்டுறவுத்துறைக்கே உரித்தான அனைத்து பண்புகளையும் தன்னகத்தே கொண்டு செயற்படுவார்களேயானால் கூட்டுறவுத் துறையும் உயர்ந்த நிலையை அடையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



கடந்த வருட இறுதியில் பெய்த கடும் மழை காரணமாக தொழில் பாதிப்படைந்த தனது அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம் வெள்ள நிவாரணப் பொதிகளை வழங்கியபோது..

■ சென்ற இதழ் தொடர்ச்சி ■

# இங்கிலாந்தின் கூட்டுறவு இயக்கம்

5

## ஆரம்ப வரலாறு

சமுதாய அநீதிகளுக்கு மூலகாரணம் இலாப நோக்கமே. இலாப நோக்கத்துக்காக பணத்தின் மேலுள்ள ஆசையே முக்கிய காரணம். பணத்திற்குப் பதிலாக உழைப்புப் பத்திரத் திட்டமொன்றை ஓவன் ஆரம்பித்தார். இங்கிலாந்தில் கூட்டுறவு அமைப்பை ஒத்த "தேசிய கூட்டுறவு உழைப்புப் பரிவர்த்தனை நிலையம்" ஒன்றையும் ஆரம்பித்தார். தரமற்ற, விலையற்ற பொருட்களைத் தொழிலாளர் கொண்டுவந்து நிரப்பியதாலும், உழைப்புப் பத்திரங்களை வாங்க கள்ளச் சந்தைகளும் ஏற்பட்டதால் றொபேர்ட் ஓவனின் இத்திட்டமும் தோல்வியடைந்தது.

1824ம் ஆண்டு றொபேர்ட் ஓவன் அமெரிக்காவுக்குச் சென்று 1824ம் ஆண்டு தொடக்கம் 1929ம் ஆண்டு வரை அமெரிக்காவில் கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்க அயராது உழைத்தார். அமெரிக்காவில் இன்டியானா மாநிலத் தலைவரின் ஆதரவுடன் நியூகாமினி என்ற இடத்தில் ஒரு பெரிய தொழிலாளர் குடியிருப்பை ஏற்படுத்தினர். நியூகாமினி என்பதன் தமிழ்க் கருத்து "புதிய மகிழ்ச்சி" என்பதாகும். இத்தொழிலளார் குடியிருப்பு 40 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாக இருந்தது. இக்குடியிருப்பில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் குடியமர்த்தப்பட்டனர். இத்தொழிலாளர் குடியிருப்பில் கூட்டுறவுப் பண்ணைகள், தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. இக்குடியிருப்புக்கள் "கூட்டு உழைப்பின்" அடிப்படையிலும் "கூட்டுப் பொறுப்பின்" அடிப்படையிலும் சிறப்பாக இயங்கத் திட்டங்களை வகுத்தார். இத்தொழிலாளர் குடியிருப்புக்களும் தொழிலாளரிடையே அறிவின்மை, ஒற்றுமையின்மை, பொது நலனின்மையால் தோல்வியடைந்தன.

றொபேர்ட் ஓவனின் கூட்டுறவுச் சிந்தனைகளிலுள்ள உயர்ந்த கருத்துக்களை றொச்டேல் முன்னோடிகள் ஒழுங்கமைத்து, வடிவமைத்து 1844ம் ஆண்டு கூட்டுறவுக் கொள்கைகளாக உலகுக்குப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

றொபேட் ஓவனைப் பிற்காலப் பொருளாதார மேதைகளான றிக்காடோ, மோல்தஸ் போன்றோர் உலகின் முதலாவது ஜனநாயக சோசலிசவாதியென்றும், உலகின் முதலாவது சமூக சீர்திருத்தவாதியென்றும், உலகின் முதலாவது தொழிற்சங்கவாதியென்றும், உலகின் முதலாவது கல்வி முன்னோடியென்றும், உலகின் முதலாவது தொழிலாளர் தோழனென்றும், கூட்டுறவியக்கத்தின் தந்தையென்றும் வாயாரப் பாராட்டி வாழ்த்தியுள்ளனர்.

ஓவனின் சிறந்த புரட்சிகரக் கருத்துக்கள் யாவும் வெற்றி பெறாமல் அவரின் கண்முன்னே தவிடு பொடியாக்கப்பட்டு விட்டன. ஆதலால் ஓவன் தனது இறுதிக் காலத்தில் பணக்கஷ்டத்திலும், வறுமையிலும் மனவேதனையிலும் வாடிவதங்கிக்கொண்டு வாழ்ந்தார். றொபேட் ஓவன் 1858ம் ஆண்டு மரணப் படுக்கையில் இருக்கும்போது, அவர் உலக மக்களுக்கு விடுத்த பின்வரும் இறுதிச் செய்திகள் அவரின் மனவேதனையை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. அவை பின்வருமாறு,

"நான் அடுத்த நூற்றாண்டுகளில் பிறக்க வேண்டியவன். ஆனால் நான் காலத்தால் முந்திப் பிறந்து விட்டேன். எனது புரட்சிகரமான மனிதநேயச் சிந்தனைகள் யாவும் தவிடுபொடியாக்கப்பட்டுவிட்டன. ஆனால் எனது வாழ்க்கை பயனற்றதாகிவிடவில்லை. மனிதனை வளப்படுத்தக்கூடிய சிந்தனைகளை நான் முன்வைத்துள்ளேன். முக்கியமான உண்மைகள் பலவற்றை நான் உலக மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளேன். அவை என்றோ ஒரு நாள் இவ்வுலகில் நிச்சயமாகக் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கும்" என்று தனளது மரணப்படுக்கையில் றொபேட் ஓவன் உலக மக்களுக்கு அறிவித்தார்.

றொபேட் ஓவனின் இத்தீர்க்கதரிசனம் இன்று உலகில் பூரண வெற்றிபெற்றுள்ளது. தொழிற்சங்க இயக்கம், ஜனநாயக சமவுடமை வாதம், தொழிற்சாலைச் சீர்திருத்த வாதம், கல்வி அபிவிருத்தி, சமூக சீர்திருத்தம், கூட்டுறவியக்கம் போன்ற ஓவனின் உயர்ந்த சிந்தனைகள் இன்றும், என்றும் உலகில் கொழுந்து விட்டுப் பிரகாசித்துக் கொண்டே இருக்கின்றன. இவை அனைத்தும் உலகின் மாபெரும் இயக்கங்களாகிவிட்டன. றொபேட் ஓவனின் கல்லறையில் எழுதப்பட்டுள்ள கூட்டுறவுச் சொற்றொடரொன்று பின்வருமாறு "நல்லெண்ணத்துடன் உலக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வது மனித சமுதாயத்தின் கொடை" என ஓவனின் கல்லறையில் எழுதப்பட்டுள்ளது.

### டாக்டர் வில்லியங்கிங் 1786-1865

றொபேட் ஓவனின் கூட்டுறவுச் சிந்தனைகளைப் பூரணமாகப் பின்பற்றிப் பல பேரறிஞர்கள் இங்கிலாந்தில் கூட்டுறவியக்கத்தை உருவாக்கவும் வளர்க்கவும் அரும்பாடுபட்டனர். இவர்களுள் மிகமுக்கியமானவர் டாக்டர் வில்லியங்கிங் ஆகும்.

வில்லியம் கிங் றொபேட் ஓவனின் பூரண ஆதரவாளனாக விருந்து, அவரின் புரட்சிகரமான பொருளாதார, கூட்டுறவுச் சிந்தனையைப் பரப்பவும், செயற்படுத்தவும் அரும்பாடுபட்டார். இவர் படித்துப் பட்டம் பெற்ற உயர்ந்த கல்விமானாகவும், சிறந்த கூட்டுறவாளராகவும் விளங்கினார். இங்கிலாந்தில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்குத் தனது பெருமளவிலான சொந்தப் பணத்தைச் செலவுசெய்து பல முயற்சிகளை மேற்கொண்டார். தனது சொந்தச் செலவில் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் பல கூட்டுறவுச் சங்கங்களை இங்கிலாந்தில் நிறுவினார்.

"கூட்டுறவாளன்" என்ற பத்திரிகையை வெளியிட்டு தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், கூட்டுறவியக்கத்தை உருவாக்கி, வளர்ப்பதற்குமான பல உத்திகளையும், சிந்தனைகளையும் தொழிலாளருக்கும், கூட்டுறவாளருக்கும் பரப்பினார். முதலும், நாட்டின் மூலவளமும் முதலாளிக்குச் சொந்தமானதல்ல. அதனைக் கடின உழைப்பால் திரட்டுபவன் தொழிலாளியே. ஆதலால் முதல் தொழிலாளியின் கட்டுப்பாட்டில் வரவேண்டுமென்று போதித்தார். தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பல தொழிற்சங்க நடவடிக்கைகளிலும், அர்ப்பணிப்புக்களுடன் ஈடுபட்டார். **(வளரும்)**

## "பனையின் வளர்ச்சியை குறைப்பது தொடர்பான ஆய்வுக்கு பனை வள சங்கங்கள் உதவவேண்டும்"

"வளர்ச்சி குறைந்த பனை மரங்களை உருவாக்கும் முயற்சிகளுக்கு பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்குவதற்கு பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

சாவகச்சேரி சங்கத்தில் நடைபெற்ற கல்விப் பயிற்சியின் போது இவ்வாறு கேட்டுக்கொண்டார் சாவகச்சேரிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு பி.தளிர்ராஜ் அவர்கள்.

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல அங்கத்தவர்கள், பணியாளர்களுக்குமான கல்விப் பயிற்சி சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் இம்மாதம் 8ம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமானது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவிக்கையில்,

அங்கத்தவர்கள் பிளாஸ்ரிக் போத்தல்கள்மூலம் கள் பெறுவதால் பலவிதமான நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதால் அதனை உடன் நிறுத்தி மண்முட்டியின்மூலம் இச்செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும். உற்பத்திப் பொருளைக் கொள்வனவு செய்யும் பாத்திரம் தூய்மையானதாக இருக்கவேண்டும். அதேபோல கிளை நிலையங்களிலும் கொள்வனவு, விற்பனை செய்யப் பயன்படுத்துகின்ற பாத்திரங்கள், பாவனையாளர் பாவிக்கும் ஜக்குகள் என்பவற்றை ஓடும் நீரில் (ரப்) கழுவக்கூடியதாக நீர்வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும்.

இந்நடவடிக்கைகளை செய்யாமல் இதன்ஊடாக வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படும் பட்சத்தில் இச்சங்கங்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும். உரிய அனுமதிகளை உரியவர்களிடம் பெற்று செயற்படவேண்டும்.

பனை மரத்தின் வளர்ச்சியை (உயரம்) குறைப்பது தொடர்பான ஆய்வினை யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்தியக் கலாநிதி நற்சினார்க்கினியன் அவரகள் பல ஆண்டுகாலமாக மேற்கொண்டிருந்ததாகவும் அதனை தொடர்ந்து செய்வதற்கு ஏனையவர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்காமையால் கைவிட்டுவிட்டதாகவும் நற்சினார்க்கினியர் தெரிவித்திருந்தார். எனவே இச்சங்கங்கள் இவ்விடயத்தையும் கவனத்தில்கொண்டு வளர்ச்சி குறைந்த பனைமரங்களை உருவாக்க பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

பனம்கள் மனித உடலுக்கு வேண்டிய அனைத்துக் கனியுப்புக்களும் நிறைந்த ஒரு பானமாக திகழ்வதால் ஆண்டாண்டு காலமாக எமது மக்கள் அதனை பருகி வந்ததன்மூலம் எவ்வித மான நோய்களுமின்றி உடல் ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ்ந்துள்ளார்கள். எனவே இவ்வளம் சார்ந்த உற்பத்திகளை வடக்கு மாகாண சபை ஏற்றுக்கொண்டு அதில் நவீனத்துவத்தைப் புகுத்தி உபஉணவு உற்பத்திகளை அதிகரித்து சாராயம் போன்ற மதுசார்ந்த உற்பத்திகளை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இப்பயிற்சி நெறியில் யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் கல்வி விரிவாக்கல் உத்தியோகத்தர், சமாசக் கல்வி உத்தியோகத்தர் ஆகியோர் வள்வாளர்களாகக் கலந்துகொண்டனர்.

அடுத்து யாழ். மாவட்ட கூட்டுவுச் சபையின் வளவாளர் கூட்டுறவுத் தலைமைத்துவம் தொடர்பாகவும், சமாசத்தின் கல்வி அலுவலர் சமாசத்தினால் 2015ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சகாயநலத் திட்டம் தொடர்பான விளக்கத்தையும் வழங்கினார்.

சுமார் 50ற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட இப்பயிற்சி நெறியானது சங்கத்தின் பொதுமுகாமையாளரின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

## புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது!

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு கடந்த டிசெம்பர் 17ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக க.சுதாகரன், உபதலைவராக சு.சிறிகாந், பொருளாளராக சு.சிவலிங்கம், செயலாளராக வ.சிவகுமார், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக தி.தர்மகுலசிங்கம், தி.விஜயதீபன், து.தங்கநாதன், ப.சுதாகரன், மற்றும் திருமதி ச.வனிதா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

### ஒற்றை எழுத்தில் பொருள்தரும் சொற்கள்

| | |
|---|---|
| அ | - தமிழ் எண் எட்டின் குறியீடு |
| ஆ | - பசு |
| ஈ | - கொடு, பறக்கும் பூச்சி |
| உ | - சிவன் |
| ஊ | - தசை, இறைச்சி |
| ஏ | - அம்பு |
| ஐ | - ஐந்து, அழகு, தலைவன், வியப்பு |
| ஓ | - வினா, மதகு |
| கா | - சோலை, காத்தல் |
| கூ | - பூமி, கூவுதல் |
| கை | - கரம், உறுப்பு |
| கோ | - அரசன், தலைவன், இறைவன் |
| சா | - இறப்பு, பேய் |
| சீ | - இகழ்ச்சி, திருமகள் |
| சே | - எருது, அழிஞ்சில் மரம் |
| சோ | - மதில் |
| தா | - கொடு, கேட்பது |
| தீ | - நெருப்பு |
| து | - கெடு, உண், பிரிவு, உணவு, பறவை இறகு |
| தூ | - வெண்மை, தூய்மை |
| தே | - நாயகன், தெய்வம் |
| தை | - மாதம் |
| நா | - நாக்கு |
| நீ | - நின்னை |
| நே | - அன்பு, நேசம் |
| நை | - வருந்து, நைதல் |
| நொ | - நொண்டி, துன்பம் |
| நோ | - நோவு, வருத்தம் |

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்

# துணை விதிகள் 5

சென்ற இதழ் தொடர்ச்சி

19) கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள்

19:13 உறுப்புரிமை அனுமதி முறைப்படி உறுதிப் படுத்தப்படாதுள்ள உறுப்பினர் ஒருவர் அல்லது இத்துணைவிதிகளிற் குறித்தளவு பங்குடமை கொண்டிராத ஒருவர் கிளைப்பொதுக் கூட்டத்தில் பங்குபற்றவோ அல்லது வாக்களிக்கவோ அல்லது துணைவிதி 23:6இன்படி சங்கத்தின் பொதுச்சபைக்கு கிளையின் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படுவதற்கோ தகுதியற்றவராவார்.

20) கிளைக் குழுக்கள்

20:1 ஒவ்வொரு கிளையும் ஒன்பது (9) பேரைக் கொண்ட கிளைக்குழு ஒன்றைக் கொண்டிருக்கும். இவர்களில் எழுவர் (7) கிளையுடன் இணைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களாற் தமக்குள்ளிருந்து தெரிவு செய்யப்பட்டவராய் இருப்பார். ஒருவர் உற்பத்தித்துறைசார்ந்த தரக் கட்டுப்பாட்டுக் குழுவால் அல்லது வேறு பொருத்தமான கூட்டுறவு நலன்குழுவால் தெரிவு செய்யப்படுவார். ஒருவர் மகளிர் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான குழுவினாற் தெரிவுசெய்யப்பட்டவராய் இருப்பார்.

20:2 இத் துணைவிதிகளுடன் ஆணையாளரின் அதிகாரத்தின்கீழ் ஆக்கப்பட்ட பின்னிணைப்பில் இணைக்கப்பட்டவாறு கிளையின் ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத்தில் கிளைக்குழுவின் தெரிவு நடத்தப்படும்.

20:3 பின்வருவோர் கிளைக்குழுவுக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதியுடையவராகார்.

அ) 18 வயதுக்குட்பட்டவர்.

ஆ) கடனைத் தீர்க்க வகையற்றவர் எனப் பிரகடனம் செய்தவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.

இ) அதிகாரமளிக்கப்பட்டவரால் சித்த சுவாதீனமற்றவர் எனப் பிரகடனம் செய்யப்பட்டவர்.

ஈ) இச்சங்கத்திற் பெற்ற கடனை அல்லது வேறொரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது வேறு சங்க ஒழிப்போனுக்கு மூன்று மாதத்துக்கு மேற்பட்ட காலத்திற்குத் தவணை தப்பியவராகவுள்ள ஒருவர் அல்லது இச்சங்கத்திற்கு அல்லது வேறொரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது ஒழிப்போனுக்கு வேறு வகையான செல்மதியொன்றைச் செலுத்தத் தவறிய ஒருவர்.

உ) இத்துணைவிதிகளில் குறிப்பிட்ட தொகையான பங்கு ஒன்றினையேனும் கொண்டிராத ஒருவர்.

ஊ) சங்கத்தின் பொதுச்சபையின் அபிப்பிராயத்தின்படி உறுப்பினர் என்ற முறையில் தவிர, நடைமுறையிலுள்ள அல்லது பேரப் பேச்சளவிலிருக்கும் சங்கத்தின் ஒப்பந்தத்திலோ நிதி அல்லது வேறுவகைக் கொடுக்கல் வாங்கல்களிலோ அல்லது சங்கம் செய்யும் ஒரு விற்பனையிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள ஒருவர்.

எ) சங்கத்தின பொதுச்சபையின் அபிப்பிராயத்தின்படி சங்கத்தின் நலன்களோடு முரண்படுகின்ற ஒரு வியாபாரத்திலோ அல்லது வேறு நடவடிக்கைகளிலோ நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ள ஒருவர்.

ஏ) இச்சங்கத்திலோ அல்லது இச்சங்கம் உறுப்பினராகவுள்ள பிறிதொரு சங்கத்திலோ சம்பளம் பெறும் பணியாளராக உள்ள ஒருவர்.

ஐ) சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகுதியீனங்கள் உடைய ஒருவர்.

20:4 பின்வருவன நிகழுங்கால் அது காரணமாகவே ஒருவர் கிளைக்குழு உறுப்பினர் பதவியை இழப்பார்.

அ) இத்துணைவிதிகளின்படி உறுப்புரிமையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்ட ஒருவர்.

ஆ) துணைவிதி 20:3இன்படி தகுதியற்ற ஒருவர்.

இ) கிளைப்பொதுச்சபைக் கூட்டத்தின் முன்மொழிவில் கிளைக்குழுவிலிருந்து நீக்கப்பட்ட ஒருவர்.

ஈ) தகுந்த காரணங்களின்றி அடுத்தடுத்து மூன்று கிளைக்குழுக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காத தவறுக்காக கிளைக்குழுவின் முன்மொழிதல் மூலம் நீக்கப்பட்ட ஒருவர். அத்தகைய முன்மொழிதல் நிறைவேற்றப்படவிருக்கும் கிளைக்குழுக் கூட்டத் திகதிக்கு ஆகக்குறைந்தது ஏழு (7) நாட்களுக்கு முன்னர் அம்மொழிதல் பற்றி எழுத்தில் பதிவு அஞ்சல் மூலம் சம்பந்தப்பட்ட குழு உறுப்பினருக்கு அனுப்புதல் வேண்டும்.

உ) குறைந்தது ஒரு மாதகால முன்னறிவித்தல் கொடுத்துக் கிளைக்குழுவிலிருந்து தானாக விலகிய ஒருவர்.

ஊ) சங்கத்தின் உறுப்புரிமையிலிருந்து நீங்கிய ஒருவர்.

எ) துணைவிதி 13:6, 13:7 ஆகியவற்றின் கீழ் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்படும் ஒருவர்.

20:5 கிளைக்குழு மூன்று (3) ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும். எனினும் கிளைப் பொதுச்சபைக் கூட்டம் கிளைக்குழு உறுப்பினர் ஒருவரையோ அல்லது குழுவினர் யாவரையுமோ நீக்கிவிட்டுப் புதிய உறுப்பினர்களை அவர்களிடத்துக்குத் தெரிவுசெய்யும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்மொழிதல் ஒன்றினை நிறைவேற்றுவதன்மூலம் இவ்வாறு செய்யலாம்.


20:6 ஒரு கிளைக்குழுத் தலைவர், துணைத் தலைவர், செயலாளர் ஆகியோரை தமக்குள் இருந்து ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டத்தில் தெரிவுசெய்தல் வேண்டும். இத்தகைய ஒவ்வொரு அலுவலரும் இத்துணைவிதி 20:4இன்படி உறுப்புரிமையின்றும் நீங்கியவராதல் அல்லது தானாக விலகுதல் அல்லது பதவியினின்றும் நீக்கப்படல் ஆகியன நிகழாதவிடத்து தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து மறு தெரிவு நடைபெறும் வரை பதவியில் இருப்பார்.

20:7 ஒரு கிளைக்குழுவானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.

அ) கிளையுடன் இணைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் நலன்களை பேணும் விழிப்புக் குழுவாகச் செயற்படல்.

(வளரும்)

தொழிலின்போது மரத்தால் வீழ்ந்து உயிரிழந்த பனை தெ.வள கூட்டு. சங்க உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வடக்கு கூட்டுறவு அமைச்சு தலா 1 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கிய நிகழ்வின்போது



சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் பனம்விதை நடுகை நிகழ்வின்போது





சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம் தொழில் பாதிப்பு நிவாரணம் வழங்கியபோது





மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் பனம் விதை நடுகையின்போது



மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம் வெள்ள நிவாரணம் வழங்கியபோது



கொடிகாமம் பனை தெ. வ.அபி. கூட்டு. சங்கம் அங்கத்தவர், பணியாளருக்கு ஆடைகள், சீருடைகள் வழங்கியபோது







## உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ...........................

-1ம் பக்கத் தொடர்ச்சி-

2013ம் ஆண்டு தொடக்கம் 2015 டிசெம்பர் வரையிலுமான காலப்பகுதிக்குள் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களில் தொழில்புரியும் போது மரத்தால் தவறி வீழ்ந்து இறந்த அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூபா 1 இலட்சம் நிதி உதவி வழங்குவதாக இவ்வருடம் சமாசத்தால் நடத்தப்பட்ட 93வது சர்வதேச கூட்டுறவுதின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போது தெரிவித்திருந்தார் வடக்கு கூட்டுறவு அமைச்சர் திரு பொ.ஐங்கரநேசன் அவர்கள்.

இதற்கமைவாக தொழிலின்போது உயிரிழந்த பனை தென்னை வள சங்கங்களைச் சேர்ந்த 6 அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 1 இலட்சம் ரூபா வீதம் மொத்தம் 6 இலட்சம் ரூபா வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சினால் வாழ்வாதார மேம்பாட்டு நிதியாக ஒதுக்கப்பட்டிருந்தது. இந் நிதியினை உயிரிழந்த அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு காசோலை மூலமாக வடமாகாண முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிதியினை கோண்டாவில் சங்கத்தைச் சேர்ந்த நாகலிங்கம் புஸ்பராணி, மானிப்பாய் சங்கத்தைச் சேர்ந்த குணராசா-சின்னராசா, வேலணை சங்கத்தைச் சேர்ந்த தயாவின்சன் மித்திரா, கரவெட்டி சங்கத்தைச் சேர்ந்த சுபாஸ்கரன் லலிதா, பண்டத்தரிப்பு சங்கத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி புவிதரன், மற்றும் தருமராசா ஜெயதர்ஷா ஆகிய 6 பேருக்கே தலா 1 இலட்சம் ரூபா வீதம் மொத்தம் 6 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

## மானிப்பாய் சங்கம்
## வெள்ள நிவாரணம் வழங்கியது

கடந்த வருட பிற்பகுதியில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக பனந்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இப்பாதிப்பினை உணர்ந்த பனை தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கங்கள் வெள்ள நிவாரணமாக அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கியிருந்தன.

இந்த வகையில் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் மழையால் பாதிக்கப்பட்ட தனது சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் என சுமார் 200 பேருக்கு வெள்ள நிவாரணப் பொதியினை வழங்கியதாக அச்சங்கத்தின பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## சாவகச்சேரி ....................

-1ம் பக்கத் தொடர்ச்சி-

சமாசப் பணியாளர்கள் ஆகியோர் இப்பனம் விதை நடுகை நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது சுமார் 10 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

**மானிப்பாய் சங்கம்**

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் காக்கைதீவுப் பெருவெளியில் 10 ஆயிரம் பனம் விதைகளை நாட்டியுள்ளது.

இப்பனை விதை நாட்டும் நிகழ்வில் பனை அபிவிருத்திச சபையின் பிரதிநிதிகள் சங்கத்தின் தலைவர், பொதுமுகாமையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்க நெறியாளர்குழு உறுப்பினர்கள், சங்கப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் 3 இலட்சம் பனம் விதைகளை நாட்டும் திட்டத்தின்கீழ் மானிப்பாய் சங்கம் பொருத்தமான இடத்தில் 10 ஆயிரம் பனம் விதைகளை நாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொடிகாமம் ...................

-1ம் பக்கத் தொடர்ச்சி-

இதன்போது வடக்கு மிருசுவில் கிளை அங்கத்தவராக தி. சந்திரகுமார் அகால மரணமடைந்தமை காரணமாக அவரின் மகளான இசைப்பிரியா என்பவரின் எதிர்காலத்தை முன்னிட்டு ரூபா 50 ஆயிரம் அவரின் பெயரில் நிலையான வைப்பிலிட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இவ்வாறான உதவிகளை எதிர்காலத்தில் ஏனைய சங்கங்களும் முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவதன் மூலம் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமைவதற்கு வாய்ப்பு ஏற்படும் எனப் பலரும் தெரிவித்துள்ளனர்.

## சமாசத்தின் ...................

-1ம் பக்கத் தொடர்ச்சி-

பணியாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர்—திரு வ.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமாசத் தலைவர் திரு நா.கணேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

## சாவகச்சேரி சங்கம் தொழில் பாதிப்பு நிவாரணம் வழங்கியது

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கடந்த வருடம் பெய்த கடும் மழை காரணமாக தொழில் பாதிப்படைந்த அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தொழில் பாதிப்பு நிவாரணம் வழங்கியுள்ளது.

நூறுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கு பெருமளவான வெள்ள நிவாரண பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கியுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

இந்நிகழ்வுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பனை தென்னை வள நிறுவனங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோருக்கும், யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும், யாழ். மாவட்ட கூ.அ. அலுவலர் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## சமாசம் சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணம் வழங்கியது

சமாசத்தின் சமூக நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2002ஆம் ஆண்டு தொடக்கம் அங்கத்தவரக்ள். பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக பல இலட்சம் ரூபா நிதிச் செலவில் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேபோல 2015ம் ஆண்டும் 23 பனை தென்னை வள நிறுவனங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கான பாடசாலை உபகரணங்கள் சுமார் 8 இலட்சம் ரூபா செலவில் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 120 பக்க பயிற்சிக் கொப்பிகள் 4,460உம், 160 பக்க பயிற்சிக் கொப்பிகள் 9,426 உம், 200 பக்க பயிற்சிக் கொப்பிகள் 5,308உம் என மொத்தம் 19,194 பயிற்சிக் கொப்பிகளும் மற்றும் பேனா 4,957 உம் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தப் பெறுமதி சுமார் ரூபா 8 இலட்சம் ரூபா ஆகும்.

## வரிக்குறைப்பு தொடர்பாக கோப்பற் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

வடமாகாண ப.தெவ.அ.கூ.ச.சமாசத்தின் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில் வடிசாலைகள், போத்தலடைப்பு நிலையங்களின் வரிக் குறைப்பு தொடர்பாக கொழும்பிலுள்ள கோப்பற் நிறுவன பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலின்போது சமாசத் தலைவரினால் வரி அதிகரிப்பின் காரணமாக சங்கங்கள், கொத்தணிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினையும், இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தினையும் அங்கத்தவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டி அறிக்கை ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கோப்பற் நிறுவன பிரதிநிதிகள் ஜனாதிபதி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரிச்சலுகைகளை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தெல்லிப்பழை சங்கத்தில் 93வது சர்வதேச கூட்டுறவுதின மற்றும் கௌரவிப்பு விழா

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், 93வது சர்வதேச கூட்டுறவுதின மற்றும் கௌரவிப்பு விழா நிகழ்வினை கடந்த மாதம் 23ம் திகதி சங்க காரியாலயத்தில் நடத்தியது.

சங்கத்தின் தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், முதன்மை விருந்தினராக வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் திரு பொ.ஐங்கரநேசன் அவர்கள் கலந்துகொண்டார்.

இதில் சங்கத்தின் ஓய்வுபெற்ற அங்கத்தவர், பணியாளர், சிறந்த அங்கத்தவர், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர், மாணவர்கள், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணவர்கள் மற்றும் சங்கம் நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டிய வெற்றியாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.


### கிராமிய வங்கியின்மூலம்....

உங்களது வேலைப்பளுவை குறைப்பதற்கு இப்போது நாம் தயாராகிவிட்டோம்!

அது எப்படி? உங்களது -

- மின் கட்டணம்
- தொலைபேசிக் கட்டணம்
- காப்புறுதிக்கட்டணம்

இவற்றை செலுத்துவதற்கு இப்போது நீங்கள் எங்கும் அலைந்து திரியவேண்டாம். எமது கிராமிய வங்கியின் ஊடாக அதனை நீங்கள் செய்யமுடியும்!

#### எமது வங்கியின் ஏனைய முதன்மை செயற்பாடுகள்

- நிலையான வைப்பு
- நிறுவன சேமம்
- கட்டாய சேமம்
- சிறுவர் சேமம்
- அங்கத்தவர் சேமம்
- ஓய்வூதிய சேமம்
- அங்கத்தவர் அல்லாதோர் சேமம்
- குறைந்த வட்டியில், குறைந்த நேரத்தில் விசேட கடன், அங்கத்தவர்,பணியாளர்,மகளிர் கடன்

#### அங்கத்தவர் நலத்திட்டங்கள்

- மாதாந்த ஓய்வூதியம் வழங்கல்.
- விபத்து மரணக்கொடை வழங்கல்.
- கூட்டுறவுக் கல்விப் பயிற்சி வழங்கல்.

#### கல்வி ஊக்குவிப்புத் திட்டம்

- முன்பள்ளிகளை நிர்வகித்தல்
  ஆசிரியர் வேதனம், மாணவர், ஆசிரியர் சீருடை, சத்துணவு வழங்கல்.
- அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி, பல்கலைக் கழக அனுமதி என்பவற்றுக்கு நிதி ஊக்குவிப்பு வழங்கல்.

#### மகளிர் நலத்திட்டங்கள்

- தையல், மனைப்பொருளியல், அழகுக் கலை பயிற்சியளிப்பு.
- சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பு.

### கோண்டாவில் பனை தென்னை வ.அ.கூ.ச.சங்கம்

கே.கே.எஸ். வீதி, தாவடிச் சந்தி, கோண்டாவில்.

E-mail kondavilpdcsruralbank@gmail.com

தொ.பேசி: 021 222 3539/021 205 3147


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது.